உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 19 திங்கட்கிழமை (04.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 279

# மஹிந்த நேர்மையாகச் செயற்படுவதற்கு இந்தியா உத்தரவாதம் அளிக்கவேண்டும்

## தேசிய அரசு யோசனை குறித்து ஐ.தே.க. தலைவர் ரணில் கருத்து

கொழும்பு,செப்.4

இலங்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுடன் இணைந்து தேசிய அரசாங்கமொன்றை அமைக்க ஐக்கிய தேசியக் கட்சி உதவ வேண்டுமாயின் தேசிய அரசு நிறுவும் விடயத்தில் மஹிந்த நேர்மையாகச் செயற்படுவதற்கு இந்தியா முழு உத்தரவாதத்தை வழங்கவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் ஐ.தே.க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஐ.தே.க. தலைவர், சென்னையில் நேற்று இந்தியப் பாதுகாப்புத்துறை ஆலோசகர் எம்.கே.நாராயணனை சந்தித்துப் பேசினார்.

இலங்கையில் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து இங்கு விரிவாகப் பேசப்பட்டது. தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது குறித்தும், இதனூடாக தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுப்பது குறித்தும் அப்போது ஆராயப்பட்டது.

அரசுடன் இணைவது குறித்தும், தேசிய அரசு விவகாரம் குறித்தும் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளூர ஆராய்ந்து வருவதாக இங்கு குறிப்பிட்ட ஐ.தே.க. தலைவர், இந்த விடயத்தில் புதுடில்லியின் உத்தரவாதம் தேவையென்றும் வலியுறுத்தியிருக்கிறார்.

தேசியப் பிரச்சினைத் தீர்வு மற்றும் அது தொடர்பான கொள்கைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெளிவாக முன்வைக்க வேண்டுமெனவும், தேசியப் பிரச்சினைக்கு உண்மையாகவும், நேர்மையாகவும் தீர்வு காண்பதற்கு தேசிய அரசு உதவுமானால் அதுபற்றி பரிசீலிக்கத்தயாரென்றும் ஐ.தே.க. தலைவர் இங்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

(ஐ)

# தொண்டு நிறுவனங்கள் மீதான கெடுபிடி அதிகரித்தால் மனிதப் பேரவலம் நேரும்

## உதவிப் பணியாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, செப்ரெம்பர்4

**இலங்கையில் இனப் பிணக்கு மோசமடைந்து வரும் இப்போதைய சூழலில், தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகள் மீதான கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றன. இந்நிலைமை தொடரும் பட்சத்தில் ஐ.நா. தொண்டர் அமைப்புகள் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு போன்றவை யுத்தப் பிரதேசத்திலிருந்து வெளியேறத் தீர்மானிக்குமானால் அங்கு மனிதப் பேரவல நெருக்கடி ஏற்படும்.**

**சர்வதேச தொண்டர் அமைப்புகளின் பணியாளர்கள் இவ்வாறு எச்சரித்திருக்கின்றனர் என வெளிநாட்டுச் செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டிருக்கின்றது.**

அந்தச் செய்தியில் வெளியாகியுள்ள அம்சங்கள் வருமாறு:-

அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் புதிதாகச் சமர் இடம்பெற்றுவரும் பல இடங்களுக்குச் செல்லக்கூடிய வாய்ப்புள்ள அமைப்புகள் ஐ.நா. தொண்டு நிறுவனங்களும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும்தான்.

பல நூறாயிரக் கணக்கில் மக்கள் - பெரும்பாலும் தமிழ் மக்கள் - இப்பிரதேசங்களில் உணவு, நீர் மற்றும் ஏனைய வசதிகளின்றி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

தங்களது ஊழியர்களுக்கான பாதுகாப்பு நிலைமை மேம்பாடடையாவிட்டால் தங்களுடைய செயற்பாட்டை நிறுத்தி விடுவார்கள் என ஐ.நா. அமைப்புகளினதும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினதும் அதிகாரிகள் கடந்த சில நாட்களில் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தொண்டுப் பணியாளர்கள் 17 பேர் கொல்லப்பட்டமைக்கு அரச படைகளே காரணம் என்று குற்றம் சுமத்தப்பட்ட பின்னணியிலேயே இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

"எங்கள் ஊழியர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று நாம் கருதுவோமானால் நாங்கள் அங்கு செயற்பட மாட்டோம்." - என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஆசிய - பசுபிக் பிராந்தியப் பிரதிநிதிகள் நாயகம் றிட்டோ மெயிஸ்டா கடந்த வெள்ளியன்று ஜெனிவாவில் தெரிவித்தார்.

ஐ.நா. மனிதாபிமானப் பணிகளுக்குப்

(06ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று மாலை உக்கிர மோதல்

தென்மராட்சி போர் முன்னரங்கப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே ஒரு மணி நேரத்திற்கு மேலாக மோதல்கள் நேற்று மாலை இடம்பெற்றன என இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மோதல்களைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் அமைந்துள்ள பகுதிகளை நோக்கி வரணியில் அமைந்துள்ள படைத்தளத்தில் இருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகவும் ஸ்ரீலங்கா வான்படைக்குச் சொந்தமான விமானங்களும் அப்பகுதியில் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்தது.

# ஜே.வி.பி. போன்ற கட்சிகளின் உந்துதலினாலேயே புலிகள் மீது அரசு வான் தாக்குதல் நடத்துகிறது

## முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரிகுணதிலக கருத்து

லண்டன்,செப்.04

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்தப்பட்டுவரும் விமானத் தாக்குதல்கள் ஜனாதிபதியின் விருப்பத்துக்கு மாறாக - ஜே.வி.பி. மற்றும் அது போன்ற கட்சிகளின் உந்துதலின் விளைவாகவே - நடத்தப்படுகின்றன.

- இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார் ஓய்வுபெற்ற விமானப்படைத் தளபதியும், பாதுகாப்புத்துறை விமர்சகருமான ஏயார் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக.

பி.பி.ஸி. தமிழோசைக்கு அளித்த செவ்வியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

இந்தப் பிரச்சினையை பூதாகரமாக்க விரும்பவில்லை என்று ஜனாதிபதி கூறிவருகின்றார். அத்தோடு தான் ஒரு சமாதானவாதி என்றும் அவர் சொல்கின்றார். அதற்கு மேல் பேச்சுக்குத் தயார் என்றும் கூறிவருகின்றார். அதைவிட பிரபாகரனைச் சந்திப்பதற்குத்

(06ஆம் பக்கம் பார்க்க)

# தலைநகரில் தமிழர்கள் கடத்தப்பட்டால் விரைந்து நடவடிக்கை எடுக்க மக்கள்குழு

## மகேஸ்வரன் எம்.பி. ஏற்பாடு, ஜனாதிபதியும் அதற்கு உடன்பாடு

கொழும்பு,செப்.4

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழ் வார்த்தகர்கள், இளைஞர்கள், யுவதிகள் கடத்தப்படுவதைத் தடுக்கவும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சிவிலியன்களை உள்ளடக்கிய குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழுவுக்கு அலுவலகமும் வாகனங்களும் வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் நேற்று உதயனுக்கு இத்தகவலைத் தெரிவித்தார்

கொழும்பில் தமிழ் வர்த்தகர்கள், இளைஞர், யுவதிகளைக் கடத்தி கப்பம் கோரும் சம்பவங்கள் சமீப காலமாக அதிகரித்துள்ளன. இது தொடர்பாக மகேஸ்வரன் எம்.பி. ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

இதேவேளை, மகேஸ்வரன் எம்.பி. நாளை மறுதினம் 6ஆம் திகதி கொழும்பு மற்றும் அதன் சுற்றுப் புறங்களைச் சேர்ந்த இந்து மத குருமார், ஆலய அறங்காவலர், புத்திஜீவிகள், வர்த்தகர்கள் என 250 பேரை ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள கூட்டமொன்றுக்கு அழைத்துச் செல்லவுள்ளார்.

இக்கூட்டத்திலேயே சிவில் பாதுகாப்புக் குழு நியமிக்கப்படும். இக்குழு இயங்குவதற்கு வசதியாக ஒரு அலுவலகம் அரசால் வழங்கப்படுவதுடன் வாகனங்களும் வழங்கப்படும்.

(06ஆம் பக்கம் பார்க்க)

# வாகனங்களுக்கு இனி எரிபொருள் பங்கீட்டு அட்டைகளுக்கே!

## அரச அதிபரின் புதிய ஏற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.4

குடாநாட்டில் பாவனையில் உள்ள வாகனங்களின் உரிமையாளர்களுக்கு எரிபொருள் பங்கீட்டு அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

பங்கீட்டு அட்டைக்கான விண்ணப்பப் படிவங்களை நடப்பு வருட வரி அனுமதிப் பத்திரம் பெற்ற பிரதேச செயலகங்களில் நாளை முதல் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் -

குறிப்பிட்ட விண்ணப்பப்படிவங்களிலேயே விண்ணப்பிக்குமாறும் - அரச அதிபர் கே.கணேஸ் வாகன உரிமையாளர்களைக் கேட்டுள்ளார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

# கையடக்கத் தொலைபேசிகள் திருமலையில் மீண்டும் இயங்குகின்றன

## யாழ்ப்பாணத்தில் அறிகுறி எதுவும் இல்லை

திருகோணமலை,செப்.4

ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னர் தடைப்பட்டிருந்த கைத்தொலைபேசி சேவைகள் திருகோணமலையில் நேற்றுத் தொடக்கம் இயங்கத் தொடங்கின.

சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னதாக தடைப்பட்டுப்போன டயலொக், லங்கா பெல் நிறுவனங்களின் தொலைபேசிச் சேவைகள் நேற்றுக்காலை முதல் இங்கு மீண்டும் இயங்கத் தொடங்கின. (06ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.கட்சி சம்மேளனக் கூட்டம் இன்று ஜனாதிபதி தலைமையில் நடக்கிறது

கொழும்பு, செப். 4

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 55ஆவது சம்மேளனக் கூட்டம் இன்று ஜனாதிபதியும், கட்சித்தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ வின் தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் கட்சித் தலைவர்கள், இராஜதந்திரிகள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களென சுமார் இரண்டாயிரத்து 500 பேர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தேசியப் பிரச்சினைத் தீர்வு தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை இன்று வெளியிடப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் கூறின. முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளதால் மாநாடு நடைபெறும் பௌத்தாலோக மாவத்தை பகுதிகளில் நேற்றுமுதலே பாதுகாப்பு கடுமையாகப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை-

மாநாட்டுக்கு வரும் அனைவரையும் பஸ்களில் ஏற்றிச் சென்று மாநாட்டை அலரிமாளிகையில் நடத்துவது குறித்தும் ஆராயப்பட்டிருக்கிறது. பாதுகாப்புக் காரணங்களுக்காவே இவ்வாறான திட்டம் குறித்து ஆராயப்பட்டதாக அரச உயர்மட்ட வட்டாரங்கள் கூறின. (ஐ-5)

# குழுக்களின் பிரதித் தலைவர் பதவி ஐ.தே.கவின் மகேஸ்வரனுக்கு உறுதி

கொழும்பு, செப். 4

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் அமர்த்தப்படுவது உறுதியாகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். சச்சிதானந்தன் முன்னதாக இந்தப் பொறுப்பை வகித்து வந்தார். இ.தொ.கா. ஆளுங்கட்சியில் இணைந்ததையடுத்து அவர் தனது பதவியை ராஜினாமாச் செய்தார்.

இதனையடுத்து, வெற்றிடமாக இருக்கும் இந்தப் பதவிக்காகப் போட்டியிட மகேஸ்வரன் எம்.பி. தீர்மானித்ததையடுத்து அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை ஆதரவைத் தெரிவித்துள்ளது. இந்நிலையில் மேற்படி பதவியில் மகேஸ்வரன் எம்.பியை அமர்த்துவதற்கு அரச உயர்மட்டமும் ஆதரவைத் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மகேஸ்வரன் எம்.பியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, குழுக்களின் பிரதித் தலைவர் பதவியில் மகேஸ்வரனை அமர்த்த ஆளுங்கட்சி ஒத்துழைக்குமென்று கூறியுள்ளார்.

மகேஸ்வரன் எம்.பியை குழுக்களின் பிரதித் தலைவர் பதவியில் அமர்த்துவதற்கு ஆளுங்கட்சியின் சில உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்த போதும் ஜனாதிபதி அதனை நிராகரித்து விட்டாரெனத் தெரிய வருகிறது. (ஐ-03)

# இன்று கூட்டத்துக்கு அனுரா வரமாட்டார் அமைச்சர் பதவி பறிபோக வாய்ப்பு?

கொழும்பு, செப். 4

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இன்றைய சம்மேளனக் கூட்டத்தில் கட்சியின் முன்னாள் தலைவி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரும் அமைச்சருமான அனுரா பண்டாரநாயக்க ஆகியோர் கலந்துகொள்ள மாட்டார்களெனத் தெரிகிறது.

இன்றைய கூட்டத்தில் அமைச்சர் அனுரா பண்டார நாயக்க கலந்து கொள்ளாதபட்சத்தில் அவருக்கு எதிராக கட்சித் தலைமை கடும் நடவடிக்கை எடுக்குமெனவும் பெரும்பாலும் அவரின் அமைச்சுப் பதவி பறிபோகும் சாத்தியமும் உள்ளதென்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்ட வட்டாரங்கள் கூறின.

கடந்த வார இறுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரிட்டனுக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தபோது லண்டனில் நடந்த இராப்போசன விருந்தில் கலந்து கொள்ளுமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், அந்த அழைப்பை அவர் நிராகரித்தார். இந்தப் பின்னணியில் இன்று நடைபெறும் சம்மேளனக் கூட்டத்தில் முன்னாள் கட்சித்தலைவி சந்திரிகா கலந்துகொள்ள மாட்டாரெனத் தெரிவிக்கப்படுகிறது. இதே வழியினை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவும் பின்பற்றி இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளாத பட்சத்தில் இதுவிடயத்தில் கட்சித் தலைமை அவருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமெனத் தெரிகிறது. (ஐ-5)

# இன்று ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டங்கள்

கொழும்பு, செப். 4

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து இந்தக் கூட்டத்தின்போது விவாதிக்கப்படவுள்ளது. தமது பிரிட்டன் விஜயம் குறித்து ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி விளக்கமளிக்கவுள்ளார்.

இதேவேளை -

நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் பதவியை ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனுக்கு வழங்குவது தொடர்பிலும் ஜனாதிபதி இன்று நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கருத்து வெளியிடுவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டமும் இன்று கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-05)

# தலைநகரின் முக்கிய 27 வீதிகளில் வீடியோ கமரா மூலம் கண்காணிப்பு!

கொழும்பு, செப்.4

கொழும்பிலுள்ள முக்கிய வீதிகளில் கண்காணிப்பு வீடியோ கமரா பொருத்துவதற்குக் குற்றப் புலனாய்வு பொலிஸார் தீர்மானித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

கொழும்புப் பகுதியில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 27 வீதிகளுக்கு இவ்வாறு வீடியோ கமரா பொருத்தப்படும் என்றும் தெரிய வருகிறது.

கொழும்புப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக இடம்பெறும் தீவிரவாதத் தாக்குதல்கள், கொலை, கொள்ளை மற்றும் ஆள்கடத்தல் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த நடைமுறை செயல்படுத்தப்படும் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீதிகளில் கண்காணிப்பு வீடியோ கமரா பொருத்துவதற்கு பொதுமக்கள் தங்களது ஒத்துழைப்பை முழுமையாக வழங்க வேண்டும். அத்துடன், எங்கேயாவது குற்றச் செயல்கள் இடம்பெற்றால் உடன் பொலிஸ் அவசரத் தொலைபேசி இலக்கத்திற்கு அறியத் தரவேண்டும் என்று பொலிஸார் கேட்டுள்ளனர். (ஐ-10)

# புலனாய்வுப் பிரிவினரே வர்த்தகர்களை கடத்திச் சென்று கப்பம் கறக்கின்றனர்

## கொழும்பு எம்.பி. மகேஸ்வரன் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 4

கொழும்பிலுள்ள தமிழ் வர்த்தகர்களைக் கடத்தி இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே கப்பம் கோருகின்றனர்.

- இவ்வாறு கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கடந்த வெள்ளிக்கிழமை குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் தமிழ் இளைஞர், யுவதிகள் மற்றும் தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்படுவது தொடர்பாக மலையக மக்கள் முன்னணி கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு 'ஹொலிடே இன்' ஹோட்டலில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியது. இச்செய்தியாளர் மாநாட்டில் மலையக மக்கள் முன்னணித்தலைவர் அமைச்சர் பெ.சந்திரசேகரன், பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன், இ.தொ.கா. பிரதித்தலைவர் ஆர்.யோகராஜன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களான பத்மினி சிதம்பரநாதன், கே.ஈழவேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தி.மகேஸ்வரன் எம்.பி. இச்செய்தியாளர் மாநாட்டில் பேசும் போது கூறியதாவது:-

கொழும்பில் கடந்த மூன்று மாதங்களில் மாத்திரம் 35இற்கும் அதிகமானோர் கடத்தப்பட்டுள்ளனர். இவர்களை இராணுவ புலனாய்வுப் பிரிவினர் கப்பம் பெறுவதற்காக கடத்தியுள்ளதாகவே தெரிகிறது. இவர்கள் விடுவிக்கப்படாவிட்டால் கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவோம். - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ-02)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்

*யோசேப்பு எட்வின்* அவர்களின் அன்புத் தாய்

திருமதி **யோசேப்பு மேரி திரேசா**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலைச் சமூகம்.**

(53545)


# இம்மாதம் 7ஆம் திகதி சந்திரகிரகணம்

இலங்கை மக்கள் எதிர்வரும் 7ஆம் திகதி பௌர்ணமி தினத்தன்று சந்திரகிரகணம் ஒன்றைப் பார்வையிடமுடியுமென 'ஆதர் சீ கிளார்க்' விஞ்ஞான நிலையம் அறிவித்திருக்கிறது. பௌர்ணமி தினம் அன்று இரவு 10.12 மணிமுதல் நேரடியாக இந்தச் சந்திரகிரகணத்தை மக்கள் காணமுடியும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

# நேற்றைய படுகொலைகள்

## யாழ். நகரில்....

யாழ்.நகரப்பகுதியில், 4ஆம் குறுக்குத் தெருச் சந்தியில் நேற்று முற்பகல் இளைஞன் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சண்டிலிப்பாய், மாகியப்பிட்டியை சேர்ந்த பாஸ்கரன் சுரேஸ் (வயது 31) என்ற இளைஞனே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

முதலாம் குறுக்குத் தெருவும் வேம்படி வீதியும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள கராஜ் ஒன்றில் பணிபுரியும் பிரஸ்தாப இளைஞர் வேலை செய்து கொண்டிருக்கும் போது அங்கு வந்த ஆயுததாரிகள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பியோடினர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.நீதவான் இ.த. விக்னராஜா சம்பவ இடத்தில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேதப்பரிசோதனையின் பின் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். (1-15-78)

## பருத்தித்துறையில்....

பருத்தித்துறையில் பஸ்நிலையப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பருத்தித்துறைப் பகுதியில் தையற்கடையில் வேலை செய்துவந்த சி.மதன் (வயது 27) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

சடலம் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (1-15-78)

## திருமலையில்......

திருகோணமலை அன்புவழிபுரத்தில் நேற்றிரவு 8.15 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த எஸ்.காந்தி (வயது 42) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

சடலம் திருகோணமலை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (1-151)


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி அப்புக்குட்டி (அம்மான்)

(சைக்கிள் கடை, மூளாய் றோட்.)



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அப்புக்குட்டி (அம்மான்) நேற்று(03.09.2006) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பதியரின் மகனும், தெய்வநாயகியின் அன்புக் கணவரும், தனலட்சுமி(ஆசிரியை, வ/மாறா இலுப்பைக்குளம் அ.த.க பாடசாலை), விஜயலட்சுமி, காலஞ்சென்ற ராதாலட்சுமி மற்றும் சத்தியசீலன், பவானி ஜெயசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காசிநாதனின் (டோகா) அன்பு மாமனும், மார்கண்டுவின் அன்பு சகோதரனும் நாகேந்திரனின்(டோகா) அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2006) திங்கட் கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அராலி வேலங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆஸ்பத்திரியடி, அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.* (53547)

*தகவல்:*
**மனைவி, பிள்ளைகள்.**

## திருமதி நாகலிங்கம் பாக்கியம்

துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைச் சேர்ந்த திருமதி நாகலிங்கம் பாக்கியம் நேற்று (03.09.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-பொன்னாச்சி தம்பதியரின் பாசமிகு மகளும், நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், சதானந்தன் (பால்தம்பி)யின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், அன்னலிங்கம், வேலாயுதபிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நாகேஸ்வரியின் அன்பு மாமியும் ரம்மியா (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), திவ்வியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*துவாரகை வீதி,*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.*

*தகவல்:*
**நா.சதானந்தன்**
*(பால்தம்பி-மகன்)*

## கந்தையா குமாரசாமி

அல்லைப்பிட்டி, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், மண்டைதீவு, 8ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குமாரசாமி நேற்று (03.09.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பராகத்தின் அன்புக் கணவரும் சந்திராதேவி, சறோஜினி தேவி, சோதிமணி, அஞ்சலிதேவி, கௌரிதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான புஸ்பராசா, கமலேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகபாக்கியத்தின் அன்புச் சகோதரரும் கந்தசாமி, குலசிங்கநாதன், தவமணிதேவி, நேசரத்தினம், பரிமளம் ஆகியோரின் மைத்துனரும் ஜெயகாந்தன், மங்களகுமார், கந்தசாமி, யோகனந்தி, கலாநந்தி, தயாநந்தி, கேதீசன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2006) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் மண்டைதீவு தெற்கு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*8ம் வட்டாரம்,*
*மண்டைதீவு.*

*தகவல்:*
**ஜெகதீஸன்**
*(சுதன் -பேரன்)*

பங்குத்தந்தை காணாமல் போன விவகாரம்

# கத்தோலிக்க தேவாலயங்களில் சுழற்சிமுறையில் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப்.4

காணாமற்போன அல்லைப்பிட்டி பங்குத் தந்தை வண பிதா ஜிம்பிறவுண் அடிகளாருக்கும் அவருடன் சென்ற உதவியாளருக்கும் என்ன நடந்தது என்ற உண்மையை வெளிப்படுத்தக் கோரி சுழற்சிமுறையில் உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

இன்று திங்கட்கிழமை தொடக்கம் யாழ். மறை மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க ஆலயங்களில் சுழற்சி முறையில் உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது.

யாழ். தேவாலயப் பங்குத்தந்தை வண பிதா மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளார் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி சுழற்சிமுறை உண்ணாவிரதப் போராட்டங்களில் விரும்பிய எவரும் பங்கு பற்றலாம் என்றும் - அவர் மேலும் கூறினார்.

அல்லைப்பிட்டி பங்குத்தந்தை மற்றும் அவரது உதவியாளரின் வெளிப்படுத்தலைக் கோரி கடந்த வாரம் முழுவதும் யாழ். மரியன்னை பேராலய முன்றிலில் உண்ணாவிரதம் முன்னெடுக்கப்பட்டமை தெரிந்ததே. இதில் யாழ். மறை மாவட்ட பங்குத் தந்தையர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன், கத்தோலிக்க ஆலயங்களில் நாளாந்தம் நடைபெற்றுவரும் பூசை வழிபாடுகளில் இவர்களுக்காக விசேட செபவேண்டுதல்களும் நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கது. (51)

## ஆய்வுக் கட்டுரை போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.4

அகவிழி சஞ்சிகை நடத்திய தேசியரீதியிலான 'கல்விச் சமூகமும் பால் நிலைச் சமத்துவமும்' என்னும் ஆய்வுக் கட்டுரையின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பரிசில்களைப் பெறுபவர்களின் விவரம் பின்வருமாறு:

முதலாமிடம்:ஏ.சி. ஜோர்ஜ்,ராணிசீதரன்

இரண்டாமிடம்: கேந்திரேஸ்வரி இராதாகிருஸ்ணன், பரராஜசிங்கம் இராஜேஸ்வரன், இராதேஸ்வரன் தீபா

மூன்றாமிடம்: துரைரட்ணம் பொன்னரசி, இராஜினிதேவி சிவலிங்கம்

பரிசில் வழங்கும் நிகழ்வு விரைவில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யுவதியை அச்சுறுத்தி சைக்கிள் அபகரிப்பு

கல்வியங்காடு.செப்.4

நல்லூர் சங்கிலியன் வீதியில் தனியாகச் சென்றுகொண்டிருந்த இளம் யுவதியின் துவிச் சக்கர வண்டியை இனந்தெரியாத இருவர் அச்சுறுத்தி அபகரித்துச் சென்றுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அன்றைய தினம் நண்பகல் சங்கிலியன் வீதியில் உள்ள தனது வீட்டிலிருந்து புறப்பட்ட பிரஸ்தாப யுவதியை வீட்டிலிருந்து சற்றுத் தூரத்தில் வழிமறித்த இனந்தெரியாத இருவர் அந்த யுவதியை அச்சுறுத்திவிட்டு அவரது துவிச்சக்கர வண்டியை அபகரித்துச் சென்றுள்ளனர். (ப-79)

## சுதுமலைக்குளம் ஆழமாக்கி புனரமைப்பு

சுதுமலையிலுள்ள சுதுமலைக்குளம் ஆழமாக்கப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன திணைக்களம் ஒதுக்கீடு செய்த சுமார் எட்டு இலட்சம் ரூபா நிதியைக் கொண்டு இந்தக் குளம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் மேற்கு கட்டுடை கிராம அபிவிருத்தி சங்கம், ஒப்பந்த அடிப்படையில் இந்தப் புனரமைப்பு பணியை செய்து முடித்துள்ளதாக மேற்படி சங்கத்தின் தலைவரும், மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவருமான சி.பொ.மா.க. முதலியார் தெரிவித்தார். (135)

## 'சிசு உதான' சாதனையாளர் தெரிவுக்கு விண்ணப்பிக்கலாம்

மக்கள் வங்கியின் 'சிசு உதான' சேமிப்புத் திட்டத்தின் கீழ் சாதனையாளர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி திட்டத்தின் கீழ், சாதனையாளர்களைத் தெரிவு செய்து பிரதான விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்றும் -

இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 22ஆம் திகதிவரை அனுப்பிவைக்க முடியும் என்றும் - மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு வட பகுதியிலிருந்து ஏறத்தாழ இரண்டாயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்தன என்றும் -

எனவே, இம்முறையும் வட பகுதி மாணவர்கள் மக்கள் வங்கிக் கிளைகளில் உரிய விண்ணப்பப்படிவங்களை பெற்று விண்ணப்பிக்க முடியும் என்றும் - பிராந்திய முகாமையாளர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென் பகுதிக்கு திரும்பமுடியாதுள்ள அரச அலுவலருக்கான சந்திப்பு

யாழ்ப்பாணம்,செப்.4

வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையால் திரும்பிச் செல்ல முடியாதுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான சந்திப்பு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலக முன்றிலில் நடைபெறவுள்ளது.

யாழ். அரச அதிபருடன் உத்தியோகத்தர்களின் பயணம் குறித்து கலந்துரையாடப் படவுள்ளதால் சம்பந்தப்பட்ட சகலரையும் கலந்துகொள்ளுமாறு பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் கேட்கப்பட்டுள்ளது.

## துர்க்கையம்பாள் தேரேறி வருகிறாள்!

தேவர்கள் வானத்தில் இருந்து தேர்மேல்
தேன்நிறையும் மலர்கள் சொரிய
காவடிகள் வீதியெங்கும் பஜனை பாடி
காற்சிலம்பு ஒலிக்க ஆடிவர
பூவணியும் பூவையர்கள் கற்பூரச்சட்டி
பூங்கரத்தி லேந்திமுன் செல்ல
ஆவணியோண முதல்நாள் தெல்லிநகர்துர்க்காம்பாள்
அணிநிறையும் பூந்தேரில் வருகிறாள் இன்று

- மாதாஜி.



## அல்லல்கள் அகலுமடா!

வில்லொடு சூலம் அம்பு
வீரவாள் தன்னை ஏந்தி
சொல்லொணா அழகு சொட்டும்
சுந்தரத்தேர் மீதேறி
வீல்வினை தீர்த்து எம்மை
வாழ்விக்க மனது கொண்டு
நல்லதோர் தீர்வுத் திட்டம்
நாட்டின் முன் வைப்பேனென்றாள்
அல்லல்கள் அகலும் காலம்
அதிக தூரத்தில் இல்லையடா
வல்லவள் இத் துர்க்கையடா!
வாயார வாழ்த்தி வாழ்வாய்.

- விகடகவி.

# ஆணையாளர் அறிவுறுத்தலால் உள்ளூராட்சி அலுவலர்கள் அதிர்ச்சி !

தென்மராட்சி, செப்.4

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்ற அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தத்தமது அலுவலகங்களில் கையொப்பமிட்டு கடமைகளை மேற்கொள்ளுமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க.இளங்கோவன் 'பக்ஸ்' மூலம் அறிவித்துள்ளார்.

இந்த அறிவித்தல் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு அதிர்ச்சியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக, ஊரடங்குச்சட்டம் மாறுபட்ட நேரங்களில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் உத்தியோகத்தர்கள் தமது தொழில் நிலையங்களுக்கு செல்வதற்குப் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்குவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

அத்துடன், போக்குவரத்துச் சேவைகளும் ஓரிரு சேவைகளுடன் நிறுத்தப்படுவதால் தொழில் நிலையங்களுக்குச் செல்வோர் வீடு திரும்ப முடியாத நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் வேளையில் யாழ். அரச அதிபரால் பேருந்து சேவைகள் நடத்த ஒழுங்குகள் செய்யப்படும் என கடிதத்தில் அறிவிக்கப்பட்ட போதிலும், பல மார்க்கங்களில் பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (117)

## கடமைக்குச் சமுகமளிக்காத சுகாதாரத்துறை அலுவலரின் விவரம் அனுப்புமாறு பணிப்பு

யாழ்ப்பாணம்,செப்.4

யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் இதுவரை கடமைக்கு சமுகமளிக்காமலுள்ள சுகாதாரத்துறை ஊழியர்கள் விவரங்களை உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

தமது நிர்வாகத்தின் கீழுள்ள பொறுப்பு வைத்திய அதிகாரிகளுக்கு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் க. கேதீஸ்வரன் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார். (51)

## தார்பூசி சேதமாக்கப்பட்ட வல்வெட்டித்துறையில் உள்ள எம்.ஜி. ஆர். சிலை மண்ணெண்ணெய் பயன்படுத்தித் துப்புரவு

வல்வெட்டித்துறையில் தார்பூசி சேதமாக்கப்பட்ட தமிழகத்தின் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் சிலை தற்போது மண்ணெண்ணெய் பயன்படுத்தி துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதி இரவு ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் எம்.ஜி.ஆர். சிலையில் தலை, மார்பு பகுதிகளில் தார் பூசப்பட்டு சேதமாக்கப்பட்டது. அதேபோல், பாஷையூரில் அமைக்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆர். சிலையும் தார்பூசியும், கை உடைக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டது.

இவற்றை அடுத்து தமிழகத்தில் பலத்த எதிர்ப்பு அலைகள் எழுந்தன.

இந்நிலையில் - கடந்த வியாழக்கிழமை ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் வல்வெட்டித்துறையில் தார்பூசி சேதமாக்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆரின் சிலை மண்ணெண்ணெய் ஊற்றி துப்புரவு செய்யப்பட்டுள்ளது. இதனை அடுத்து சிலை முன்னரைப் போன்று பொலிவுடன் காணப்படுகிறது. (70)

## சொந்த இடங்களுக்கு திரும்பும் தென்மராட்சி மக்கள்

யுத்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியிருந்த தென்மராட்சி பிரதேச மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வருவதைக் காணமுடிகிறது. இதேவேளை, தீவகப் பகுதியைச் சேர்ந்த பல குடும்பங்களும் தென்மராட்சிப் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (117)

# காலபோக நெற்செய்கைக்கு பண்டத்தரிப்பில் கடனுதவி

வலி. தென்மேற்கு, செப்.4

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் எதிர்வரும் காலபோக நெற் செய்கையில் ஈடுபடவுள்ள சங்க உறுப்பினர்களான விவசாயிகளுக்கு நெற்செய்கை ஊக்குவிப்புக் கடனை வழங்கவுள்ளது.

சங்கத்தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற சங்க இயக்குநர் சபைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி கடனைப்பெற விரும்பும் விவசாயிகள் தமது பிரிவு கிளைக் குழுவின் சிபார்சைப் பெற்று கடனுக்கு விண்ணப்பிக்க முடியும் என்று சங்க பொது முகாமையாளர் இ. தங்கராசா தெரிவித்துள்ளார். (135)

## வைத்தியசாலைக்கான அடிக்கல் நடப்பட்டது

நவாலி,செப்.4

ஆனைக்கோட்டையில் அமையவிருக்கும் மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 30ஆம் திகதி நடைபெற்றது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரின் ஏற்பாட்டில் அதன் தலைவர் க. மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கட்டடத்திற்கான அடிக்கல்லை சட்டத்தரணியும் பிரசித்த தொத்தாரிசுமான எம். தியாகராசா நட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில், பொறியியலாளர் தங்கராசா மற்றும் வைத்திய அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், கிராம சேவையாளர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்களும் கலந்து கொண்டனர். (100)

# புங்குடுதீவில் கடந்த மாதம் கைதான இளைஞர்கள் பற்றிய தகவல் இல்லை

மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

கல்வியங்காடு,செப்.4

கடந்த மாதம் 19ஆம் திகதி புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தில் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் பற்றி எதுவித தகவலும் கிடைக்கப்பெறவில்லையென மனித உரிமைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

வின்சன் நற்பிரதாபன் (வயது - 28), வின்சன் மக்சி (வயது - 24), வின்சன் ஜெப்பிரதாபன் (வயது - 17) ஆகிய சகோதரர்களே கைது செய்யப்பட்டுள்ளவர்கள் என்று கூறப்படுகின்றது.

இவர்களது வீட்டுக்கு 19ஆம் திகதி இரவு வேளை சென்ற இராணுவத்தினர் வீட்டின் கதவைத் திறக்குமாறு அதட்டியதாகவும் - கதவைத் திறக்க மறுக்கவே வீட்டின் கதவை உடைத்து உட்புகுந்து பிரஸ்தாப இளைஞர்களை கைது செய்ததாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த நாள் விடிந்தவுடன் அவர்களது தந்தை புங்குடுதீவு இராணுவத்தினருடன் தொடர்புகொண்டு கேட்டபோது, தாம் அவர்களைக் கைது செய்யவில்லை என தெரிவித்துள்ளனர்.

இதுவரைக்கும் அவர்கள் பற்றிய எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை என யாழ். மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (79)

## கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்கள்

குருநகர்,செப்.4

குருநகர் இறங்குதுறையில் இருந்து குடாக்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று மீளவும் கரைக்குத் திரும்பாமல் வன்னியில் தங்கியுள்ள கடற்றொழிலாளர்களின் குடும்பத்தவர்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சி. தவரட்ணம் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிவாரணப் பொருள்கள் சர்வோதயம் நிறுவனத்தின் அனுசரணையுடன், திருநெல்வேலியில் இயங்கும் லீட்ஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

சுமார் 154 கடற்றொழிலாளர்களின் குடும்பத்தவர்களுக்கு கடந்த 23ஆம் திகதி யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனப் பணிமனையில் வைத்து நிவாரணப் பொருள்களான அரிசி, மா, சீனி, பருப்பு, மீன் ரின் ஆகியவைகள் வழங்கப்பட்டன என்றும் - தெரிவிக்கப்பட்டது. (51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும்வரட்சி காரணமாக விவசாயச் செய்கையில் பாதிப்பு

கல்வியங்காடு,செப்.4

குடாநாட்டில் தற்போது கடும் வெப்பம் நிலவுகின்றது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

குறிப்பாக நீர்வேலி, கோப்பாய், அச்செழு மற்றும் உரும்பிராய், ஊரெழு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், குடாநாட்டில் தற்போது எரிபொருள்களுக்கு பெருந்தட்டுப்பாடு நிலவுவதாலும் விலை உயர்வாலும் நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதிலும் பின்னடைவைச் சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால், பயிர்கள் அழிவடைந்து செல்வதாக விவசாயிகள் மத்தியில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு மானிய விலையிலும் பங்கீட்டு அடிப்படையிலும் மண்ணெண்ணெய் விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய சம்மேளனங்களை விவசாயிகள் கேட்டுள்ளனர்.

இதேவேளை -

யாழ். குடாநாட்டில் தற்போது அமுலிலுள்ள ஊரடங்குச் சட்டத் தைப் பயன்படுத்தி சிலர் மரக்கறி வகைகளைத் திருடி விற்பதாலும் சந்தை வியாபாரிகள் மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்வதாலும் விவசாயிகள் தாம் நட்டமடைவதாகத் தெரிவிக்கின்றனர். (71)

## தொழிற்பயிற்சி இன்று மீண்டும் ஆரம்பம்

வலி.தென்மேற்கு,செப்.4

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தினால் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் அனுசரணையுடன் ஆனைக்கோட்டை, கரைப் பிரான் பிள்ளையார் கோவில் கிராமிய அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் நடைபெற்றுவந்த 2ஆவது தொகுதி மாணவர்களுக்கான மின் இணைப்பு, நீர்க்குழாய் பொருத்தல் தொழிற்பயிற்சி நெறி இன்று திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்களை இப்பயிற்சிக்கு சமுகமளிக்குமாறு வலி.தென்மேற்கு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.(ப-135)

# வலி.தென்மேற்கு வாகன உரிமையாளர் விவரம் பண்டத்தரிப்பு படைமுகாமில் வைத்து பதிவு

வலி.தென்மேற்கு,செப்.4

வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த வாகன உரிமையாளர்களின் விவரம் படையினரால் சேகரிக்கப்பட்டுவருகின்றது.

பண்டத்தரிப்பு, மாதகல் மற்றும் சில்லாலை, வடலியடைப்பு, பெரியவிளான் பகுதிகளைச் சேர்ந்த வாகன உரிமையாளர்களிடம் இருந்தே வாகனங்கள் பற்றிய விவரம் சேகரிக்கப்பட்டுவருவதாகவும் -

மோட்டார் சைக்கிள்கள், கார்கள், ஹை-ஏஸ் ஆகிய வாகனங்கள் பற்றிய விவரங்களே இவ்வாறு சேகரிக்கப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் வாகனங்களின் உரிமையாளர்கள் பண்டத்தரிப்பிலுள்ள இராணுவ முகாமுக்கு தமது வாகனங்களுடன் நேரில் சமுகமளித்து பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

படையினர் விடுத்திருந்த அறிவித்தலை அடுத்து இந்தப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - உடுவில் பகுதியில் இராணுவத்தினர் வீடு வீடாக நேரில் சென்று மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்து வருகின்றனர் என்று தெரியவருகின்றது.(135)

# கொக்குவிலிலும் வாகன விவரம் வீடு வீடாகச் சென்று சேகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.4

மோட்டார் சைக்கிள்களை பதிவுசெய்யும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றார்கள்.

கொக்குவில், கோண்டாவில் மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குச் சென்று மோட்டார் சைக்கிள்கள் சம்பந்தமான விவரங்களை நேரில் பெற்று பதிவுசெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேநேரம் மற்றும் சில இடங்களிலும் இராணுவத்தினர் மோட்டார் சைக்கிள்களைப் பதிவுசெய்வதற்கு வேண்டிய முன்னறிவித்தல்களை கிராம அலுவலர்களுக்கு வழங்கிச் சென்றுள்ளதாகவும் தெரிகிறது.

மோட்டார் சைக்கிள்களை குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்துவதைத் தடுக்கும் முகமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள்.(ப-68)

# மல்லாகம் குளமங்கால் பகுதிகள் இராணுவத்தினரால் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம்,செப். 4

நேற்று மல்லாகம் குளமங்கால் குருக்கள் கிணற்றடி அளவெட்டிப் பகுதிகள் இராணுவ சுற்றி வளைப்பிற்கு உள்ளாகியது.

அதிகாலை முதல் இப்பகுதியில் இராணுவத்தினர் சென்று ஊரடங்கு சட்டம் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து வீடுகளுக்குள் சென்று தேடுதல் நடவடிக்கையில் ஈடு பட்டார்கள்.

வீடு வீடாகச் சென்று தேடுதல் மேற்கொண்டதுடன் சந்தேகத்திற்கு இடமானவர்களின் அடையாள அட்டைகளும் சோதனையிடப்பட்டன. பொது மக்களுடைய பழைய இராணுவ பதிவுகள் மற்றும் விசேட அடையாள அட்டைகள் சில இடங்களில் கேட்கப்பட்டதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள்.

(ப-68)

## தென்மராட்சி நலன்புரி நிலையங்கள் பலவும் மூடப்பட்டன

தென்மராட்சி,செப்.4

தென்மராட்சி பிரதேசத்தில் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த பல நலன்புரி நிலையங்கள் பல மூடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த குடும்பங்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பியதையடுத்து மூடப்பட்டுள்ளதாகவும் -

மந்துவில் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்கள் மட்டுமே தற்போது இயங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (117)

## வலைகளை மீட்டுவர சில மீனவர்களுக்கு இராணுவம் அனுமதி

யாழ்ப்பாணம்,செப்.4

கடலில் விடப்பட்டிருந்த மீன்பிடி வலைகளை கரைக்கு எடுத்துவருவதற்காக குருநகர் மீனவர்களை குருநகர் இறங்குதுறை ஊடாக கடலில் இறங்குவதற்கு படையினர் நேற்றுமுன்தினம் அனுமதித்தனர். குருநகரைச் சேர்ந்த 10 மீனவர்களுக்கு மட்டுமே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது. குருநகர் இறங்குதுறைக்கும் பண்ணைப் பாலத்திற்குமிடையிலுள்ள கடற்பகுதியில் தொழில் செய்யும் மீனவர்களுக்கு மட்டுமே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு இம்மீனவர்கள் இக் கடற்பகுதிக்குச் சென்று பழுதடைந்த நிலையில் இருந்த தமது பட்டிவலைகளை கரைக்கு எடுத்து வந்தனர். நாளாந்தம் 10 கடற்றொழிலாளர்கள் மட்டுமே கடலில் இறங்க அனுமதிக்கப்படுவர் என குருநகர் இறங்குதுறையிலுள்ள படையினர் தெரிவித்ததாக குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர். (ப-51)


**ST. PATRICK'S COLLEGE, JAFFNA**

**2007ஆம் ஆண்டுக்கான புதிய அனுமதி**

தரம் 2, தரம் 3 வகுப்புகள் தவிர்ந்த ஏனைய வகுப்புகளுக்கான புதிய அனுமதி விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 05.09.2006இல் இருந்து ஞாயிறு, பொது விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து ந.ப. 12.00 மணிவரை கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம், பரீட்சைக்கட்டணம் உட்பட ரூபா 300/-

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 30.09.2006ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு முன்னதாக நேரில்வந்து ஒப்படைக்கவும். தபால் மூலமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

முதலாம் வகுப்புக்கு அனுமதி கோரும் பிள்ளைகள் 01.02.2001 ஆம் திகதிக்கும் 31.01.2002ஆம் திகதிக்குமிடையில் பிறந்திருக்கவேண்டும்.

5ஆம் தரத்துக்கு அனுமதிகோரும் பிள்ளைகள் 01.02.1997இல் அல்லது அதற்குப்பின் பிறந்திருக்கவேண்டும்.

6ஆம் தரத்துக்கு அனுமதி கோரும் பிள்ளைகள் 01.02.1996இல் அல்லது அதற்குப்பின் பிறந்திருக்கவேண்டும்.

புதிய அனுமதிக்கான பரீட்சை 07.10.2006 சனிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாகும். விண்ணப்பித்தவர்கள் சமுகம்கொடுக்கவேண்டிய நேரம் மு.ப. 8.30 மணி.

(சி/50954) - அதிபர்.

**The Royal College fo Jaffna**

தரம் 1இல் சேரவிருக்கும் மாணவர்களுக்கு மூன்று மாதகால விசேட ஆங்கில, தமிழ் வகுப்புகள் வார நாள்கள் 9 to 11 மேற்படி வரை ஆங்கில வகுப்புகள் நடைபெறுகின்றன. "The Royal is The Best"

**விற்பனைக்கு**

ஸ்ருடியோவுக்குத் தேவையான வீடியோ கமராக்கள், ஸ்ரில் கமராக்கள், தளபாடங்கள், கணனி போன்றவை உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: ஊர்மிளா ஸ்ருடியோ
3ஆம் கட்டை, கல்வியங்காடு.

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.

இன்று முதல் 10.00, 2.00 காட்சிகள்

Superman

சுப்பர்மான் (தமிழாக்கம்)

**வாடகைக்கு/விற்பனைக்கு**

மானிப்பாய் வீதி, பாடசாலை வீதி, ஆறுகால்மடம் என்னும் முகவரியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு/விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: த.தனலட்சுமி
தாமரை வீதி, ஆறுகால்மடம்.
தொ.பே. 021 4590345

**பிற்போடப்பட்டுள்ளது**

தெல்லிப்பழை பல நோ.கூ.சங்கம் பணியாளர் நலன்புரிச்சங்க பொதுநல சேவைகள் நிதிக்கான மாபெரும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 05.09.2006 அன்று நடைபெற இருந்தது.

அது தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றோம். அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பணியாளர் நலன்புரிச்சங்கம்.
தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்

(53539)


## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

### 5ஆம் ஆண்டு

மலர்வு 02 - 08 - 1931



உதிர்வு 29- - 08 - 2001

அமரர் கந்தையா மாசிலாமணி
திதி: பரிவர்த்தனை ஏகாதசி 04.09.2006

மழை வெயில் பாராது விரதமிருந்து
கல்லுவைத்த கோயில்எல்லாம் கையெடுத்து
குடில் வைத்த கோயில்எல்லாம் கும்பிட்டோம்
கடவுள் தந்தது கண்ணீர்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

111, ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

### 12ஆம் ஆண்டு

மலம் மகிழ 03 - 09 - 1969



மலம் நெகிழ 27 - 08 - 1994

அமரர் மாசிலாமணி குகன்

எம்மை வாழவைக்க
வடதுருவம் சென்று விரதமிருந்தீர்
இடைநடுவில் எமை மறந்து
கண்ணகை பாதம் பற்றிவிட்டீர்.

என்றும் உன் நினைவுகளுடன்
அம்மா, சகோதரர்கள்.

(53532)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 28 - 12 - 1945



விண்ணில் 22 - 07 - 2006

அமரர் அப்பாசியார் நவமணி

புன்முறுவலும் புகழ்பூத்த நின் திருமுகமும்
மண் உலகை விட்டு ஏகி இன்றுடன்
ஒன்றரைத் திங்கள் கடந்ததுவே! ஐயா,
உன் ஆன்ம சாந்திக்காய் மன்றாடுகின்றோம்!!

26/14, அராலி வீதி,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(53541)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# கலைஞர் கருணாநிதி மீது வீழ்ந்துள்ள வரலாற்றுப் பொறுப்பு

இலங்கையில் சமாதான முயற்சிகள் குறித்து சர்வதேச சமூகமும், இலங்கை மக்களும் அதிகம் பேசிக் கொண்டாலும் - எதிர்பார்ப்புகளுடனான கருத்துக்களை வெளியிட்டு வந்தாலும் - சம்பந்தப்பட்ட தரப்புகள் என்னவோ இறுதி யுத்தத்துக்குத் தயாராகி, அதை நோக்கியே நகர்ந்துகொண்டிருக்கின்றன என்றே தோன்றுகின்றது.

இந்தச் சமயத்தில்தான் 'வரலாற்றுக் கடமை' குறித்து தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன் முக்கிய கருத்து ஒன்றைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

*''வரலாற்றுக் கடமை என்பது எல்லோருக்கும் எப்போதும் கிட்டுவதில்லை. அபூர்வமாக சில நேரங்களில் தான் அது உருவாகின்றது. அதை உணர்ந்து கடமையைச் செய்பவர்கள் வரலாற்றில் நிலைத்து நிற்கின்றார்கள்.''* - என்று குறிப்பிடும் தமிழர் தேசிய இயக்கத்தின் தந்தை அதற்கான முன் உதாரணங்களையும் முன்வைக்கின்றார்.

அவ்வாறு தமது கடமையை உணர்ந்து பணியாற்றி சரித்திரத்தில் உயர்ந்த அத்தகைய பெரும் தலைவர்களைத் தொடர்ந்து வரலாற்றுக் கடமை ஆற்றும் வாய்ப்பு - நேரம் - தமிழக முதல்வர் கருணாநிதிக்கு இப்போது கூடி வந்திருப்பதை குறிப்பிட்டுக் காட்டும் நெடுமாறன், வரலாற்றுக் கடமையை ஆற்றத் தமிழர்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்றும் அழைப்பு விடுக்கின்றார்.

நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டமை போல ஈழப் போர் இப்போது 'இறுதி யுத்தம்' என்ற எல்லையை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதையும் அவர் கோடிட்டுக் காட்டுகின்றார்.

*''தமிழீழ விடுதலைப் போரின் இறுதிக் கட்டம் பிறந்துள்ள இந்த வேளையில், தமிழர்கள் ஒவ்வொருவரும் அதற்குத் துணையாக நிற்கவேண்டிய அவசியமும், அவசரமும் நேர்ந்துள்ளது.*

*''நமது வாழ்நாளில் நமது கண்ணெதிரில் நடைபெறும் தமிழீழ விடுதலைப் போரில் நமது (தமிழகத்தின்) பங்களிப்பு என்னவென்பதை வரலாறு பதிவு செய்யும் என்பதில் ஐயமில்லை. அதைப் போலவே தமிழராகப் பிறந்தும் துரோகம் செய்தவர்களை வரலாறு ஒரு போதும் மன்னிக்காது. வரலாற்றுக் கடமை என்பது ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் ஏற்படும்போது அதை நாம் எப்படி எதிர்கொள்கிறோம் என்பது வரலாற்றில் என்றும் மறைவதில்லை.''* - என்றும் தெளிவுபடுத்துகின்றார் பெரியார் நெடுமாறன்.

ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தமிழக முதல்வர் என்ற பதவியில் இருக் கும் தலைவரின் பங்கு மகத்தானது. மிக முக்கியமானது.

மக்கள் திலகம் எம்.ஜி. இராமச்சந்திரன் தமிழக முதல்வராக இருந்தபோது அந்தப் பங்களிப்பை உயர்வாக வழங்கி, வரலாற்றுக் கடமையைச் சிறப்பாக ஆற்றி, சரித்திரத்தில் உயர்ந்தார்.

ஆனால், அவரது பெயரைச் சொல்லி ஆட்சிக்கு வந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்த வரலாற்றுக் கடமையைத் துறந்து, உதறித் தள்ளி, காட்டிக் கொடுப்பவராகச் செயற்பட்டு, தன்னைத் தாழ்த்திக் கொண்டார்.

அதே வரலாற்றுக் கடமை என்ற வேளை - வேலை - இப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கும் வந்திருப்பதை பழையவற்றை நினைவு கூர்ந்து சுட்டிக் காட்டுகின்றார் நெடுமாறன்.

*''தற்போதைய முதல்வராகியுள்ள கலைஞர் கருணாநிதியின் காலத்தில் அவர் என்ன செய்யப் போகிறார் என்பதை அறிய உலகத் தமிழர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.*

*''தமிழர்களின் நீண்ட, நெடிய வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டம் இது. உலகத்தில் தமிழருக்கென்று ஒரு தனிநாடாகத் தமிழீழம் மலரப் போகும் போராட்டம் நடைபெற்று வருகின்றது. பல்லாயிரக்கணக்கான விடுதலைப் புலிகளும், தமிழர்களும் உயிர்த் தியாகம் உட்பட எண்ணற்ற தியாகங்களைப் புரிந்து தமிழீழ மண்ணை சிவந்த மண்ணாக்கியுள்ளனர்.*

*''தமிழீழம் மலரவிடாமல் தடுக்கப் போராடும் சிங்களப் பேரினவாதிகளுக்கு ஏகாதிபத்திய நாடுகள் துணை நிற்கின்றன.*

*''தன்னந் தனியாகப் போராடும் தமிழீழ மக்களுக்குத் துணை நிற்க வேண்டிய கடமை தாய்த் தமிழகத்துக்கும், அதன் முதல்வர் கலைஞருக்கும் உண்டு.''* - இவை நெடுமாறனின் வசனங்களில் பொதிந்திருக்கும் உண்மைகள்.

தமிழர் தரப்பை ஒடுக்கும் நோக்கில் 'தேசிய அரசு' என்ற பெயரில் ஒன்றுபட சிங்களம் தயாராகி விட்டது. அதை எதிர்கொள்ள தமிழர் தரப்புத் தயாரா? அந்த வரலாற்றுக் கடமையை எப்படி நிறைவு செய்யப் போகிறோம்? - இதுதான் நமது சிந்தனையை இந்தக் காலகட்டத்தில் தூண்ட வேண்டிய ஒரே கேள்வி.

ஈழத் தமிழர்களுக்காக உலகத் தமிழினத்தை ஒன்றுபட வைத்துக் குரல் எழுப்பச் செய்யும் நடவடிக்கைக்கு தலைமை தாங்கும் பொறுப்பு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி மீது விழுந்திருக்கி றது.

அதை அவர் நிறைவு செய்து வரலாற்றில் உயர்வாரா? அல்லது அரசியல் அதிகாரம், பதவி மோகம் என்பவை காரணமாக, அந்தப் பொறுப்புகளைத் தட்டிக் கழித்து, சராசரி மூன்றாம் தர அரசியல்வாதியாக நடந்து கொண்டு தன்னைத் தாழ்த்திக் கொள்வாரா?

நெடுமாறன் கூறுவது போல அதைப் பதிவு செய்ய வரலாறு காத்திருக்கிறது; பார்த்திருக்கிறது.

# குடாநாட்டில் கடந்த மாதத்தில் 40 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்தனர்

## பதின்மூவாயிரம் மக்கள் நலன்புரி நிலையங்களில்

யாழ்ப்பாணம்,செப்.4

குடாநாட்டில் கடந்த மாதம் 11ஆம் திகதி உருவான அசாதாரண சூழ்நிலை காரணமாக 40 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என யாழ்.செயலகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்களின் ஒரு பகுதியினர் 45 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

இந்நிலையங்களில் மூவாயிரத்து 151 குடும்பங்களைச் சேர்ந்த பதின் மூவாயிரத்து 334 பேர் தங்கியுள்ளனர்.

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 13 இடம்பெயர்ந்தோர் முகாம்களும் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 13 முகாம்களும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 8 முகாம்களும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் 7 முகாம்களும் காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் 2 முகாம்களும் வேலணை மற்றும் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் தலா ஒவ்வொரு முகாமும் இயங்கி வருகின்றன.

இவற்றை விட நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் 7 ஆயிரத்து 234 குடும்பங்களைச் சேர்ந்த இருபதாயிரத்து 426 பேர் தங்கி உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(அ-1-51)

# அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றுக்கும் பெரும் தட்டுப்பாடு; மக்கள் பாதிப்பு!

## உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விலைகளோ வீழ்ச்சி!!

யாழ்ப்பாணம்,செப்.4

குடாநாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அன்றாட உணவு வகைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான அரிசி, கோதுமை மா, சீனி போன்றவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. சீனி, அரிசி என்பன அதிகளவு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. கோதுமை மா எங்குமே கிடைக்காத, காணமுடியாத பொருளாகிவிட்டது.

இடம்பெயர்ந்தும் தொழில் வாய்ப்பை இழந்தும் வாழும் மக்கள் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு வழிவகையின்றிப் பட்டினியால் வாடுகின்றனர்.

இடம்பெயர்ந்தவர்களில் பலருக்கு எந்தவித அரச நிவாரண உதவியும் கிடைக்காததால் பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

அதேவேளை -

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருள்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. அவற்றில் பல முன்னவரை விட அரை விலை, கால் விலைக்கே விற்பனையாகின்றன.

முந்திரிகைப் பழம் கிலோ 80 ரூபா தொடக்கம் 100 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன் சின்ன வெங்காயம் கிலோ ரூபா 20 தொடக்கம் 30 ஆகவும் பெரிய வெங்காயம் ரூபா 30 தொடக்கம் 40 ஆகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

(1-51-202)

# மானிப்பாயில் கைதான 15 பேரில் நால்வர் நேற்று விடுவிக்கப்பட்டனர்

கல்வியங்காடு,செப்.4

மானிப்பாய் பகுதியில் நேற்றுமுன்தினம் படையினர் மேற்கொண்ட பாரிய தேடுதல்களின் போது கைது செய்யப்பட்ட 15 பேரில் நால்வர் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

மானிப்பாய், சுதுமலை உள்ளிட்ட பகுதிகளில் நேற்றுமுன்தினம் படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர். அதன்போது 15 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் சின்னையா ஸ்ரீவரன், நல்லையா ஜெகதீசன், கனகேந்திரன் கஜேந்திரன், சிவசுப்பிரமணியம் சிவகுமாரன் ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் -

ஏனையோர் குறித்துத் தகவல் ஏதும் இல்லை என்றும்- மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(1-79)

# குருநகர் நேற்று சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம்.செப்.4

குருநகர் குடியிருப்புப் பகுதி படையினரால் நேற்று சுற்றிவளைக்கப்பட்டு தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

நேற்று காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் இடம்பெற்றது.

குருநகரிலுள்ள வீதிகளில் திடீரென வந்திறங்கிய படையினர் குருநகரிலிருந்து தமது தேவைகளை நிறைவேற்ற வெளியேறியவர்களின் அடையாள அட்டைகளைப் பரிசீலித்து வெளியேற அனுமதித்ததுடன் வீடுகளுக்கும் சென்று குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையை கேட்டறிந்து கணக்கெடுத்தனர்.

எனினும், இந்தத் தேடுதலின் எவரும் கைதுசெய்யப்படவில்லை. (51)

# திருநெல்வேலியிலும் படையினர் தேடுதல்

கல்வியங்காடு, செப்.04

திருநெல்வேலிக் கலாசாலை வீதி மற்றும் பாற்பண்ணை உள்ளிட்ட பிரதேசம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான படையினர் குவிக்கப்பட்டு வீடு வீடாகத் தேடுதல் நடத்தப்பட்டது. எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (1-79)

# முகமூடி அணிந்தவர் முன் நிறுத்தப்பட்டுச் சோதனை

## வடமராட்சியில் ஊரடங்கு நாளில்

யாழ்ப்பாணம்,செப்.4

வடமராட்சிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஊரடங்கு அமுலில் இருந்தவேளையில் சுற்றிவளைபபுத் தேடுதல் நடவடிக்கையை படையினர் மேற்கொண்டனர்.

கரணவாய் மேற்கு, கரணவாய் கிழக்கு, கீரிப்பல்லி வீதி, இராச கிராமம், கலட்டி உட்பட பல பகுதிகளில் இத்தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தேடுதல் நடவடிக்கையில் குறிப்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த அனைவரினதும் அடையாள அட்டைகளும் படையினரால் பெறப்பட்டன.

மக்கள் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு முகமூடி அணிந்தவர்கள் முன் நிறுத்தப்பட்டு அடையாளம் காணும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் அனைவரும் வீடுகளுக்குச் செல்வதற்கு பின்னர் அனுமதிக்கப்பட்டனர்.

(அ-1-70)

## தெற்கிலிருந்து வியாபாரம் செய்ய வந்தோர்

# செயலகம் முன்னால் நடத்தவிருந்த உத்தேச போராட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,செப்.4

வெளிமாவட்டங்களில் இருந்து வியாபார நோக்கத்துக்காக யாழ்ப்பாணம் வந்து மீளத் தமது இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையில் உள்ள 452பேர் சேர்ந்து, யாழ்.செயலகத்தின் முன்னால் இன்று மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

மீளத்திரும்ப முடியாத நிலையில் உள்ளவர்கள் தொடர்பாக திடீர் அனர்த்தங்களுக்கான அமைச்சர் அமீர் அலி பாதுகாப்பு அமைச்சுடனும் ஜனாதிபதி செயலகத்துடனும் பேச்சுக்களை நடத்தி வருவதாகவும்-

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் நிர்க்கதியாகியுள்ளவர்களுக் கான பயணஏற்பாடுகளை செய்வதாக அவர் உறுதியளித்துள்ளார் என்றும்-

அதன் காரணமாக இன்று செயலகம் முன்னால் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த போராட்டத்தை கைவிட்டுள்ளதாகவும் - பாதிக்கப்பட்டோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதே வேளை பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுகளை வழங்க அரச அதிபர் ஏற்பாடு செய்துள்ளார் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (அ-1)

# ரயில்வே ஊழியர்கள் அடையாளப் பணி நிறுத்தம்

கொழும்பு, செப்.4

இன்று நள்ளிரவு முதல் ரயில்வே பணியாளர்கள் அடையாளப் பணிநிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இப்பணி நிறுத்தப் போராட்டம் நாளை செவ்வாய்கிழமை நள்ளிரவு வரை தொடர்ந்து நடைபெறும் என்றும் கூறப்பட்டது. 2006ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்று நிருபத்திற்கு அமைவாக ரயில்வே பணியாளர்களுக்கான சம்பளங்கள் அதிகரிக்கப் படாமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இந்தப் போராட்டம் மேற்கொள்ளப் படவிருப்பதாக தொழிற்சங்கங்களின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். (க)

# நீர்வேலி இளைஞன் கொழும்பில் கைது!

கொழும்பு,செப்.4

கொழும்பு, கொம்பனித்தெருப் பகுதியில் உள்ள 'ரான்ஸ் ஏசியா' ஹோட்டலுக்கு முன்பாக வைத்து நீர்வேலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று நண்பகல் 12 மணியளவில் விமானப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நீர்வேலியைச் சேர்ந்த கந்தசாமி கேதீஸ்வரன் (வயது 23) என்ற இளைஞனே கைதுசெய்யப்பட்டவராவார்.

இவர் வெலிசறையில் உள்ள 'ரெலிக்கொம்' நிறுவன பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிபெற்று வருகிறார்.

பிரஸ்தான இளைஞன் விமானப் படையினரால் கொம்பனித் தெரு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் -

அங்கு தடுத்துவைக்கப்பட்டு விசாரணைசெய்யப்பட்டு வருகின்றார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய வல்லரசுகளின் போட்டிக் களமாக நாடு உருவாகும் அறிகுறி என்கிறார் ஹக்கீம்

கொழும்பு, செப். 04

பிராந்திய வல்லரசுகளுக்கு இடையிலான போட்டிக் களமாக இலங்கை மாறுகின்ற நிலைமைகளை இங்கு அவதானிக்க முடிகிறது. இது குறித்து எந்தப் பிரக்ஞையும் இல்லாதவர்களாக முஸ்லிம்கள் இருந்துவிடமுடியாது.

- இவ்வாறு எச்சரித்திருக்கிறார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயற்குழு மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் கூட்டம் நேற்றுக் காலை 'தாருஸ்ஸலாம்' கேட்போர் கூடத்தில் கட்சியின் தவிசாளரும், செயற்குழுவின் தலைவருமான பஷீர் சேகுதாவூத் தலைமையில் நடைபெற்றது.

மோதல் சூழ்நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மூதூர் மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேலும் முன்னெடுத்துச் செல்லல், கட்சிப் புனரமைப்பு, மறைந்த தலைவரின் நினைவு நாள் மற்றும் அவரது நாடாளுமன்ற உரைகளை நூலுருவில் வெளியிடுதல் தொடர்பான விடயங்கள் குறித்துத் தவிசாளர் பஷீர் சேகுதாவூத், முன்னாள் அமைச்சர் எம்.எல்.எம்.ஹிஸ்புல்லாஹ், தேசிய அமைப்பாளர் கே.எம்.பாயிஸ் ஆகியோர் இங்கு உரையாற்றினர். பிரதிநிதிகளின் கருத்துரைகளின் பின் ரவூப் ஹக்கீம் சமகால அரசியல் குறித்தும், கட்சிச் செயற்பாடுகள் குறித்தும்விசேட உரை நிகழ்த்தினார்.

அவ்வேளையில் அவர் மேலும் கூறியதாவது:-

பிராந்திய வல்லரசுகளுக்கிடையிலான ஒரு போட்டி இந்த நாட்டில் உருவாகப் போகிறது என்பதற்கான நிகழ்வுகளை அவதானிக்க முடிகிறது. இவ்வல்லரசுகளுக்கிடயிலான ஒரு போர்க்களமாக இந்நாடு மாறிவிடுமோ என்ற ஒரு நிலைமை உருவாகிவருகின்ற நிலையில் இதனைப் பற்றிய ஒரு பிரக்ஞையும் இல்லாமல் முஸ்லிம்களாகிய நாம் அரசியலைச் செய்யமுடியாது. உலகிலேயே இந்தோனேசியாவுக்கு அடுத்ததாக முஸ்லிம்களை அதிகமாகக் கொண்ட முஸ்லிம் நாடான பாகிஸ்தானும், இந்தியாவும், முஸ்லிம்களின் எதிர்காலம் சம்பந்தமாக, இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினையை ஏதோ ஒரு போக்கில் கையாளத்தொடங்கினால் பெரிய விபரீதம் நடந்துவிடும். எனவே, எமக்கு இருக்கும் பொறுப்பு சாமானியமானதல்ல. மிக நேர்மையாக நடந்துகொள்ளும் அதேவேளை, எம்முடைய சமூகத்துக்கான விடிவையும் முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுக்கொடுக்க வேண்டியிருக்கிறது . - என்றார். (ஐ)

## அரசு பக்கம் தாவுகிறார் நந்தன குணதிலக

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் மத்திய குழு உறுப்பினருமான நந்தன குணதிலக அரசில் இணையக்கூடும் என்று ஆளும் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. நந்தன குணதிலகவைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியினரைப் போல் ஜே.வி.பி.யைச் சேர்ந்த குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி தாவி அரசாங்கத்தில் இணையக்கூடும் என்று கூறப்படுகிறது. அரசாங்கத்தில் அவர் இணைந்தால் பாணந்துறை தொகுதியில் சுதந்திரக் கட்சி ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

## மட்டக்களப்பில் மௌன ஊர்வலம்

மட்டக்களப்பு, செப்.04

மட்டக்களப்பு மாவட்டத்தில் கத்தோலிக்க திருச்சபையினால் நாட்டில் நிரந்தர சமாதானம் வரவேண்டும் எனக் கோரி மௌன ஊர்வலம் நேற்றுக் காலை 7 மணியளவில் நடத்தப்பட்டது. தாண்டவன்வெளி தேவாலயத் தில் இருந்து ஆரம்பித்து மரியால் தேவா லயம் வரைக்கு மௌனமாக சமாதானத்தினை வலியுறுத்தி இப்பேரணி நடத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் காணாமல் போன அருட்தந்தை மற்றும் அவரின் உதவியாளரும் மிகவிரைவில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதனையும் வலியுறுத்தி இப்பேரணி இடம்பெற்றுள்ளது.

இப்பேரணியில் சுமார் நூறுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டுள்ளார்கள். இவர்களின் கரங்களில் சமாதானத்தினை வலியுறுத்தி பல்வேறு சுலோக அட்டைகள் காணப்பட்டன.

## வவுணதீவில் சனியன்று நள்ளிரவு இரு தரப்பும் பரஸ்பரம் ஷெல்வீச்சு

ஏறாவூர், செப். 04

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு பிரதேசத்தில் இராணுவத்தினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு 12 மணி தொடக்கம் நேற்று அதிகாலை 3 மணிவரை பரஸ்பரம் எறிகணைத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் 4 மணித்தியாலயங்களாக இடம்பெற்ற இந்தக் கடுமையான எறிகணைத் தாக்குதல்களினால் இரவுவேளையில் மட்டக்களப்பு நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

வவுணதீவு, 233ஆவது படைத் தலைமையகம் மற்றும் கொம்மாந்துறை ஆகிய படை முகாம்களிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கிக் கடுமையான எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. தாக்குதல் இடம்பெற்ற பிரதேசங்களிலிருந்து அச்சம் காரணமாக இரவுவேளையில் இடம்பெயர்ந்த மக்கள் நேற்றுக்காலை தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர். (த-157)

## தலைமன்னாரில் அகதிகள் கைது

கொழும்பு, செப்.04

இந்தியாவுக்குச் செல்லவிருந்த 47 அகதிகளை தலைமன்னாரில் வைத்து கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 47 அகதிகளையும் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களை தலைமன்னார் பொலிஸார் மன்னார் மாவட்ட நீதிமன்றில் பதில் நீதிவான் எம்.பி.எம்.பாறுக் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இவர்களில் 6 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

47 அகதிகளும் தலைமன்னார், மன்னார், வவுனியா போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

விடுதலை செய்யப்பட்ட 41 அகதிகளை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பதில் நீதிவான் பணித்துள்ளார்.

இதேவேளை, மன்னார் தாழ்வுப்பாட்டில் இருந்து இந்தியாவுக்குச் செல்லவிருந்த மேலும் 15 அகதிகளை கடற்படையினர் கைது செய்து மன்னார் நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்துள்ளனர். பதில் நீதிவான் எம்.பி.எம். பாறுக் 14 பேரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார். ஒருவரை தடுப்புக்காவலில் வைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார், வங்காலை, பேசாலை பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அகதிகள் பிரயாணம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட வள்ளமும் கைப்பற்றபட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (த - 232)

## தொண்டு நிறுவனங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பான அதிகாரி ஜான் எக்லண்ட் இத்தகைய எச்சரிக்கையை விடுத்து சில தினங்களில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடமிருந்து அதேவிதமான எச்சரிக்கை வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

"எங்களின் சக ஊழியர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டமைக்குக் காரணமானவர்கள் மீது அதற்கான பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது என்பது எங்களுக்குத் தெரியவரா விட்டால் நாங்கள் அப்பிரதேசத்தில் தொடர்ந்து பணியாற்ற முடியாது." - என்றார் எக்லண்ட்.

அப்படி ஒரு நிலை வருமானால் - கடந்த ஐந்து மாத காலமாகத் தினசரி நடக்கும் ஷெல்லடிகள், பீரங்கித் தாக்குதல்கள், விமானக் குண்டு வீச்சுகள் காரணமாக இடம்பெயர்ந்த சுமார் இரண்டே கால் லட்சம் மக்களின் நிலைமை மிக மோசமடையும்.

"மனித நேயப் பணியாளர்கள் அதிக எண்ணிக்கையில், அதிக பிரதேசத்தில் பணியாற்ற வேண்டிய கட்டாயம் எழுந்துள்ள இந்தச் சூழலில் அரசு எங்கள் பணியைச் சுருக்க - குறைக்கச் செய்ய - முயற்சிக்கிறது. ஐ.நா. வெளியேறுமானால் மிக மோசமான விபரீத நிலைமை ஏற்படும்." - என்று பெயர் குறிப்பிட விரும்பாத - தொண்டர் நிறுவன - பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

"கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கடந்த சில வாரங்களாகத் தொண்டுப் பணியாளர்கள் படையினரால் வழிமறிக்கப்பட்டு, தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர். தொண்டர் நிறுவனங்களைப் பாதுகாப்பு அமைச்சுடன் பதியும் நிலை இதுவரை இல்லாத சூழலில் அத்தகைய பதிவுக்கான சான்றிதழ்களைச் சமர்ப்பிக்குமாறு தொண்டுப் பணியாளர்களைப் படையினர் நெருக்குகின்றனர்." - என்று மற்றொரு சர்வதேசத் தொண்டு நிறுவனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (உ)

## பருத்தித்துறை கடற்சண்டையின்போது பல்லப்பை படை முகாம்மீதும் ஷெல்கள்

கொழும்பு, செப். 04

பருத்தித்துறையில் பல்லப்பை என்னும் இடத்தில் அமைந்துள்ள படைமுகாம் மீது விடுதலைப் புலிகளின் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன என்று தகவல் வெளியாகியுள்ளது.

வெள்ளிக்கிழமை இரவும் சனிக்கிழமை காலையிலும் பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்சமர் இடம்பெற்ற சமயத்திலேயே புலிகள் ஏவிய ஷெல்கள் புலோலி, பல்லப்பை இராணுவப் புலனாய்வுத்துறை முகாம் மீது வீழ்ந்தன என்று 'தமிழ்நெற்' இணையத் தளம் தெரிவித்தது.

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியிலிருந்து புலிகள் ஷெல்களை ஏவியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

படைமுகாம் பகுதியில் அமைந்திருந்த இரு வீடுகள் மீதும் ஷெல்கள் வீழ்ந்தன. எனினும், சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இதேவேளை -

காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் தரித்துநின்ற கப்பல் ஒன்று இந்தக் கடற்சமரை அடுத்து அங்கிருந்து காணாமல்போய் விட்டது என்று கூறப்படுகிறது.

இந்தியாவில் இருந்து சிமெந்து ஏற்றிக் கொண்டு நேரடியாக காங்கேசன்துறைக்கு வந்து நங்கூரமிட்டிருந்த இக்கப்பல் கடலில் மோதல் ஏற்பட்டதை அடுத்து அங்கிருந்து சர்வதேச கடற்பரப்புக்கு நகர்த்தப்பட்டிருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.(ஐ - 12)

## வாகனங்களுக்கு இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் வெளி மாவட்டங்களில் தமது வாகனங்களைப் பதிவுசெய்து யாழ்.மாவட்டத்தில் பயன்படுத்தும் வாகன உரிமையாளர்களும் இப்போது பயன்படுத்தும் பிரதேச செயலங்களுக்கு சகல விவரங்களையும் தெரியப்படுத்துமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார்.

வாகனங்களை வைத்திருப்போர் எரிபொருள் நிலையங்களில் நீண்டநேரம் காத்திருந்தபோதிலும் பலருக்கு கிடைப்பதில்லை. இலவு காத்த கிளிபோல் நின்று ஏமாற்றம் அடைந்த நிலையில் பலர் வீடு திரும்புகின்றனர். அதனால் -

கையிருப்பில் உள்ள எரிபொருளைப் பகிர்ந்து கொடுப்பதற்காகவே பங்கீட்டு அட்டைமுறை கொண்டுவரப்படுவதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கையிருப்பில் உள்ள, இனிமேல் கிடைக்கும் பெற்றோல் மற்றும் எரிபொருள்களை வாகனம் செலுத்துவோர் நியாயமான விலையில், குறைந்த அளவிலேனும் பெற்றுக் கொள்வதற்கு பங்கீட்டு முறை பெரிதும் உதவும் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வாகன உரிமையாளர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் நீண்ட நேரம் காத்துநின்றும் பல சந்தர்ப்பங்களில் ஏமாற்றத்துடன் திரும்பும் நிலையே இப்போது சாதாரணமாகிவிட்டது. அதிக விலை கொடுத்தும் எரிபொருள்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாக வாகன உரிமையாளர்கள் முறைப்படுகின்றனர். எரிபொருள் பங்கீட்டு முறை நடைமுறைக்கு வந்தால் அந்த நிலையைப் போக்கலாம் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (அ-1)

## கையடக்கத் தொலைபேசி .

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஓகஸ்ட் பதினொராம் திகதி மோதல்கள் ஆரம்பித்ததைத் தொடர்ந்து அன்றைய தினம் இரவே டயலொக் மற்றும் மொபிரெல் தொலைபேசிச் சேவைகள் தடைப்பட்டிருந்தன. பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு கையடக்கத் தொலைபேசிகளின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

திருகோணமலையிலும் அதே காரணத்துக்காக டயலொக், லங்காபெல் தொலைபேசிச் சேவைகள் ஓகஸ்ட் 16ஆம் திகதி முதல் துண்டிக்கப்பட்டன. பதினெட்டு நாள் இடைவெளியின் பின் நேற்றுக்காலை மேற்படி இரண்டு சேவைகளும் இயங்கத் தொடங்கின.

இதேவேளை-

யாழ்.மாவட்டத்துக்கான டயலொக், மொபிரெல் ஆகிய நிறுவனங்களின் சேவைகள் இன்னமும் மீள இயங்கத் தொடங்கவில்லை.

இந்த நிறுவனங்களின் கொழும்பு அலுவலகங்களே சேவைகளை இடைநிறுத்தியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் உள்ள குறிப்பிட்ட தொலைபேசி நிறுவனங்கள் அங்கு வைத்து தொடர்புகளைச் சீர்படுத்தும் போது குடாநாட்டிலும் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தமுடியும் என்றும் -

யாழ்ப்பாணத்தில் அவற்றை மீள இயக்குவதற்கான தேவை எதுவும் இருக்காது என்றும் தொலைபேசித் தொடர்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

## ஜே.வி.பி. போன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயார் என்றும் கூறுகின்றார்.

அவர் சொல்வதை நான் உண்மையென்று நம்புகின்றேன்.

ஆனால், இங்குள்ள முக்கிய விடயம் என்னவென்றால் தற்போதைய விமானத் தாக்குதல்கள் ஜே.வி.பி., மற்றும் ஜே.வி.பி. போன்ற கட்சிகளின் அழுத்தத்தின் விளைவாகவும், அந்தக் கட்சிகளினுடைய உந்துதலின் விளைவாகவும்தான் மேற்கொள்ளப்படுகின்றன.

*கேள்வி:-* விடுதலைப் புலிகள் களமுனைகளில் விமான எதிர்ப்பு ஆயுதங்களை ஏன் இதுவரையில் பயன்படுத்தவில்லை?

*பதில்:-* நான் நினைக்கின்றேன் புலிகளிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளன என்று. அதனை அவர்கள் இப்பொழுது பயன்படுத்த வேண்டாம். அவசர தேவைக்கு முக்கியமான நேரத்தில் பயன்படுத்தலாம் என்றுதான் வைத்திருக்கின்றார்கள் என்று நான் நினைக்கின்றேன்.

புலிகளிடம் அவர்களுக்குத் தேவையான அளவுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகள் கைவசம் இல்லை என என்னால்.ஓரளவுக்கு உறுதியாகக் கூறமுடியும். இருந்திருந்தால் அவர்கள் நிச்சயமாகப் பயன்படுத்தியிருப்பார்கள். அண்மையில் புலிகளுக்கு என்று விமான எதிர்ப்பு ஏவுகணை வாங்க அமெரிக்கா சென்ற சிலர், அங்கு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

புலிகளிடம் எண்ணிக்கையில் தேவையான அளவுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகள் கிடையாது என்பதையே இது காட்டுகிறது. (ஐ-12)

## தலைநகரில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச அங்கீகாரம் பெற்ற இக்குழுவுக்கு பாதுகாப்பு படை முக்கியஸ்தர்கள், அதிகாரிகளைச் சந்தித்து அல்லது தொடர்பு கொண்டு கடத்தப்படுவோர் தொடர்பாக தெரிவித்து உடன் நடவடிக்கை மேற்கொள்ளவும் வசதி செய்து கொடுக்கப்படுமெனவும் மகேஸ்வரன் எம்.பி. உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org